மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 26, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

26—

பால் குளிரூட்டும் நிலையம்

***56957—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, புலிவலம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதி, புலிவலம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருமதி மல்லிகா சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் திருச்சி மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது அரசு இயந்திரத்தை பம்பரமாகச் சுழல வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வந்து, நான் இருக்கிறேன், கவலை வேண்டாமென்று ஆறுதல் கூறி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி வந்தமைக்கும், பாதிக்கப்பட்ட ஏரி, குளம், பாலம், சாலை எல்லாவற்றிற்கும் சீர்செய்ய நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், எனது தொகுதியில் சிறுகாம்பூரில் பாதிக்கப்பட்ட பாலத்திற்குப் பதிலாக, தற்காலிக பாலம் அமைத்தமைக்கும் அங்கு புதிய பாலம் கட்டுவதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினை சமர்ப்பணம் செய்கிறேன். மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு நன்றி. புலிவலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு எவ்வளவு கொள்ளளவு உள்ள பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க உத்தேசித்துள்ளீர்கள்? அதன் மதிப்பீடு என்ன? இந்தச் சங்கமானது 23 வருடங்களாக இலாபகரமாக சிறப்பாக இயங்கி வருகின்றது. வரும்*

2006 ஜனவரி 18]

இலாபத்தில் பாதியை உறுப்பினர்களுக்குப் போனசாக வழங்கி வருகிறார்கள். 2002-ல் நானே நேரில் சென்று அந்த வறட்சியான காலகட்டத்தில் அந்த உறுப்பினர்களுக்குப் போனசைக் கொடுத்து வந்தேன். அங்கு நான் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய அந்த உறுப்பினர்கள், நாங்கள் அனைவரும் சுயஉதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளோம், நாங்கள் 2,160 உறுப்பினர்கள் உள்ளோம். தினமும் 4,500 லிட்டர் பால் ஊற்றுகிறோம். எங்களுக்கு மேலும் கட்டட வசதி வேண்டும் என்று கேட்டார்கள். நானும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தேன். ஆனால், திட்ட அலுவலர், பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்குக் கொடுக்க அரசு விதிமுறையில் இடம் இல்லை என்று கூறிவிட்டார். ஆகவே, மகளிர் நலனில் அக்கறை உள்ள அம்மாவின் அரசு வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் கட்டட வசதி செய்து தர மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்யப்படும் பாலின் தரத்தை உயர்த்தவும், பால் உற்பத்தியாளர்களுடைய பால் கறக்கும் நேரத்தினை அதிகாலை என்பதை காலை 6-00 மணி அளவிற்குக் கொண்டு வரவேண்டும் என்கிற அந்த நல்ல நோக்கத்தோடு 8 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 4,71,000 லிட்டர் பால் குளிரூட்டும் வசதி ஏற்படுத்த ரூபாய் 12.4 கோடி செலவில் 121 இடங்களில் சங்க அளவில் மொத்த பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே திருச்சி ஒன்றியத்தில் 22 இடங்களில் நிறுவப்பட உள்ளன. குறிப்பாக முசிறி தொகுதியில், புலிவலம் ஊராட்சியில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ரூபாய் 15 இலட்சம் மதிப்பில் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற மகிழ்ச்சியான தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தச் சங்கத்திற்குக் கட்டடம் வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தேவையான நிதி இருக்குமானால் பால் வளத் துறை ஆணையரின் அனுமதி பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒரு வேளை அப்படி

இல்லையென்றாலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லி மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மல்லிகா சின்னசாமி.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

27—

தனிநபர் வருமானம்

*** 18438—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிநபர் வருமானம் ஓராண்டுக்கு எத்தனை சதவிகிதம்?

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) ஆம் எனில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் வருமானத்தைப் பெருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பின்படி தனிநபர் வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. 2002 ஆம் ஆண்டு வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் கணக்கெடுப்பு இன்னும் இறுதி செய்யப்படவில்லை.